**செய்தி வெளியீடு எண்.896** **செய்தி வெளியீடு– 27.11.2009**

# சமச்சீர் கல்விக்கான இறுதிசெய்யப்பட்ட பொதுப்பாடத் திட்டம் முதலமைச்சர் கலைஞர் ஆய்வு!

தமிழகத்தில் சமச்சீர் கல்வி 2010–11ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான அறிவிப்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சமச்சீர் கல்விக்கான பொதுப் பாடத்திட்டம் தயாரிப்பது தொடர்பான அறிவிப்பு 11.9.2009 அன்று வெளியிடப்பட்டது. பொதுப் பாடத்திட்டம் தயாரிக்கும் பணியை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் மேற்கொள்ள வேண்டும் என ஆணை வழங்கப்பட்டது.

சமச்சீர் கல்வியின் முதல்படியாக பொதுப் பாடத்திட்டம் தயாரிக்கும் பணியில் தமிழகத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கொண்ட குழு ஈடுபடுத்தப்பட்டது. தயாரிக்கப்பட்ட பொதுப்பாடத்திட்ட வரைவு இணையதளத்தில் வெளியிடப்பட்டது. பொதுப்பாடத்திட்ட வரைவின் மீது மாநில மற்றும் மாவட்ட, வட்ட அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, ஆலோசனைகள் பெறப்பட்டன. பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பாடத்திட்டம் வரைவு பேராசிரியர்கள் மற்றும் துறை வல்லுநர்களின் கருத்துக்களின் அடிப்படையில் இறுதி செய்யப்பட்டது

இப்புதிய பாடத்திட்டத்தில் 6 முதல் 10 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குக் கணினி கல்வி அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் மாணவர்களுக்கு நூலக பாடவேளைகள் பள்ளி நடைமுறையில் இணைக்கப்பட்டுள்ளன. சமூக அறிவியல் பாடத்தில் முதன் முறையாக பொருளாதாரப் பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. 9 மற்றும் 10ஆம் வகுப்பிற்கு அறிவியல் பாடத்தில் செய்முறைப் பயிற்சி புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

இறுதி செய்யப்பட்ட பொதுப் பாடத்திட்டம் 27.11.2009 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் விளக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் திரு.க.அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலாளர் திரு.ஸ்ரீபதி, இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி, எம்.பி., மாநில திட்டக் குழு துணைத் தலைவர் திரு.நாகநாதன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் திரு.ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு.கோ. சத்யகோபால், இ.ஆ.ப., ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்கக இயக்குநர் முனைவர். ரெ. இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

பாடப்புத்தகங்களை குறித்த நேரத்தில் தரமாகவும், பொலிவாகவும் மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் தயாரித்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொதுப் பாடத்திட்டக் குழுவிற்கு ஆலோசனை வழங்கினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.